குன்றத்தூர் நகராட்சி

நாள்.30.04.2025

**கூட்டம் எண்.3/2025**

## சாதாரணக் கூட்டம்

குன்றத்தூர் நகராட்சியின் ஏப்ரல்-2025ம் மாதத்திற்கான சாதாரணக்கூட்டம் 30.04.2025ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணியளவில் நகரமன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்.1**

குன்றத்தூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி-2025 மற்றும் மார்ச்-2025ம் மாதத்திற்கான தினசரி நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.824 நாள்.30.04.2025**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

குன்றத்தூர் நகராட்சியின் பிப்ரவரி-2025 மற்றும் மார்ச்-2025ம் மாதத்திற்கான பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகள் பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு.

| மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவைகள் |
|---|---|---|---|
| பிப்ரவரி-2025 | - | 41 | - |
| மார்ச்-2025 | 1 | 40 | - |

**தீர்மானம் எண்.825 நாள்.30.04.2025**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண்.3</u>**

குன்றத்தூர் நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்களின் கேட்பு, வசூல், நிலுவைப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

| வரியினம் | கேட்பு ரூ (லட்சத்தில்) | வசூல் ரூ.(லட்சத்தில்) | நிலுவை ரூ.(லட்சத்தில்) |
|---|---|---|---|
| சொத்துவரி | 470.07 | 33.12 | 436.95 |
| காலியிட வரி | 111.61 | 7.84 | 103.76 |
| தொழில்வரி | 40.68 | 0.31 | 40.38 |
| குடிநீர் கட்டணம் | 48.29 | 2.72 | 45.57 |
| வரியில்லா இனம் | 5.85 | 0.00 | 5.85 |
| திடக்கழிவு மேலாண்மை வரி | 93.95 | 5.76 | 88.19 |

**தீர்மானம் எண்.826 நாள்.30.04.2025**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண்.4</u>**

குன்றத்தூர் நகராட்சியின் பிப்ரவரி-2025 மற்றும் மார்ச்-2025ம் மாத செலவுசீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

பிப்ரவரி.2025 - செ.சீ.எண்.854 முதல் 943 வரை - பொதுநிதி மற்றும் திட்டநிதி

செ.சீ.எண்.115 முதல் 134 வரை - குடிநீர் விநியோகம்

மார்ச்-2025 - செ.சீ.எண்.944 முதல் 1053 வரை - பொதுநிதி மற்றும் திட்டநிதி

செ.சீ.எண்.135 முதல் 143 வரை - குடிநீர் விநியோகம்

**தீர்மானம் எண்.827 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.5**

குன்றத்தூர் நகராட்சியில் 2024-2025ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள 19.03,2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. ஒப்பந்த பதிவேட்டினை பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ.) | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு ஜெனரேட்டர் எரக் ஷன், பேனல் போர்டு மற்றும் இதர பணிகள் | 700000 | ரமேஷ் ஏஜென்சீஸ் | குறைவு |
| | | | C.N.ராமச்சந்திரன் | அதிகம் |
| 2 | கொல்லை தெரு குறுக்கு தெருவில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் | 2000000 | C.N.ராமச்சந்திரன் | குறைவு |
| | | | E.சேகர் | அதிகம் |
| 3 | நாவிதர் தெரு 3வது குறுக்கு தெருவில் மேல்மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் | 1100000 | K.ரஞ்சித்குமார் | குறைவு |
| | | | C.N.ராமச்சந்திரன் | அதிகம் |
| 4 | நல்லீஸ்வரர் நகரில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் மற்றும் ஜெகநாதபுரம் முகப்பு சாலையில் WMM வெட்மிக்ஸ் அமைத்தல் | 600000 | D.குமரவேல் | குறைவு |
| | | | C.N.ராமச்சந்திரன் | அதிகம் |
| 5 | ஒண்டிக்காலனி மற்றும் ரோட்டுத்தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 580000 | S.சங்கர் | குறைவு |
| | | | S.முருகன் | அதிகம் |
| 6 | வேம்புலி அம்மன் கோயில் தெரு மழைநீர் கால்வாய் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 620000 | S.முருகன் | குறைவு |
| | | | S.சங்கர் | அதிகம் |
| 7 | மெட்ரோ கிராண்ட் சிட்டி காமாட்சி அம்மன் கோயில் தெருவில் தார்சாலை அமைத்தல் | 600000 | ரமேஷ் ஏஜென்சீஸ் | குறைவு |
| | | | C.N.ராமச்சந்திரன் | அதிகம் |
| 8 | வார்டு 1 முதல் 30 வரையில் உள்ள விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் புதியதாக 70 வாட்ஸ் LED விளக்குகள் அமைத்தல் | 2000000 | Sri Srinivasa Electricals | குறைவு |
| | | | Sri Vasantha Kumar & Co | அதிகம் |
| 9 | மெட்ரோ கிராண்ட் சிட்டி 9வது குறுக்குத்தெருவில் தார்சாலை அமைத்தல் | 1940000 | ரமேஷ் ஏஜென்சீஸ் | குறைவு |
| | | | C.N.ராமச்சந்திரன் | அதிகம் |

**அலுவலக குறிப்பு -**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2056/2024/இ1)

**தீர்மானம் எண்.828 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.6**

குன்றத்தூர் நகராட்சியில் 2024-2025ம் ஆண்டு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திறந்தவெளி மேம்பாட்டு நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள 20.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்த பதிவேட்டினை பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ.) | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 30 வார்டுகளில் உள்ள பூங்காக்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 1800000 | Alfa Builders | குறைவு |
| | | | K.கௌரி | அதிகம் |
| 2 | மெட்ரோ கிராண்ட் சிட்டி செம்மொழி அடர்வன பூங்காவில் நடைபாதை சாலை மற்றும் குடில் மற்றும் இதர பணிகள் | 1000000 | C.N.ராமச்சந்திரன் | குறைவு |
| | | | E.சேகர் | அதிகம் |
| 3 | சாய் அவென்யூ பூங்காவின் அருகில் அணுகுசாலைக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 700000 | C.N.ராமச்சந்திரன் | குறைவு |
| | | | E.சேகர் | அதிகம் |
| 4 | சம்மந்தம் நகரில் சேக்கிழார் சிறுவர் பூங்காவில் அறிவியல் உபகரணங்கள் அமைத்தல் மற்றும் இதர பணிகள் | 2000000 | C.N.ராமச்சந்திரன் | குறைவு |
| | | | E.சேகர் | அதிகம் |

**அலுவலக குறிப்பு -**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2056/2024/இ1)

**தீர்மானம் எண்.829 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.7**

குன்றத்தூர் நகராட்சியில் 15வது நிதிக்குழு மானியம் (Un-Tied Grant) 2023-2024ம் ஆண்டின் கீழ் பணிகள் மேற்கொள்ள 18.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்த பதிவேட்டினை பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி யின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | மேத்தா நகர் 15வது மேற்கு தெருவில் தார்சாலை அமைத்தல். | 40.00 | C.N.ராமச்சந்திரன் | குறைவு |
| | | | M.கார்த்திக் | அதிகம் |
| 2 | மணிகண்டன் நகர் மெயின் ரோடு தார்சாலை அமைத்தல். | 14.40 | C.N.ராமச்சந்திரன் | குறைவு |
| | | | M.கார்த்திக் | அதிகம் |

**அலுவலக குறிப்பு -**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.554/2025/இ1)**

**தீர்மானம் எண்.830 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.8**

குன்றத்தூர் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து பணிகள் மேற்கொண்டு வரும் திரு.G.சுரேஷ் என்பவர் தனது பெயரில் உள்ள ஒப்பந்தத்தினை M/s.KGS Construction, எண்.1, குடுமி தெரு, குன்றத்தூர், சென்னை – 600069 என்ற நிறுவனத்தின் பெயரில் மாற்றம் செய்யக்கோரி உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1299/2025/இ1)

**தீர்மானம் எண்.831 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.9**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டிற்கான நவீன கட்டண கழிப்பிடம், தற்காலிக தினசரி நாளங்காடி மற்றும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மலையடிவாரத்தில் நகராட்சி வாகன நிறுத்துமிடம் ஆகியவற்றிற்கு கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமத்திற்காக ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் குறித்த அறிவிக்கையினை நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்காணும் விவரப்படி விளம்பர நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | விவரம் | நிறுவனத்தின் பெயர் | விளம்பரம் வெளியிட்ட நாளிதழ் / நாள் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | நவீன கட்டணக் கழிப்பிடம் வசூலிக்கும் உரிமை | M/s.Enthrall Communications Pvt Ltd., Chennai - 600030 | தினமணி, சென்னை / 09.03.2025 | PB/00745/24-25 நாள்.11.03.2025 | 24276/- |
| 2 | தற்காலிக தினசரி அங்காடி வசூலிக்கும் உரிமை | | | | |
| 3 | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மலையடிவாரத்தில் நகராட்சி வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | | | | |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.751/2025/அ1)

**தீர்மானம் எண்.832 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.10</u>**

குன்றத்தூர் நகராட்சியில் டெங்கு காய்ச்சல் மற்றும் பிற தொற்றுநோய் பரவுவதை தடுக்க பல்வேறு முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை, காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.250/இ5/2022 நாள்.01.09.2022ன் வழிகாட்டு நெறிமுறைகளின்படி தற்காலிக DBC பணியாளர்களை அமர்த்தி டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு பணியின் அவசியம் கருதி 01.12.2024 முதல் 31.03.2025 வரை நான்கு மாதங்களுக்கு தனியார் நிறுவனத்தின் மூலம் டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு பணிகள் மேற்கொள்ள குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.772 நாள்.10.01.2025ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்காலம் 31.03.2025 உடன் முடிவடைவதால் டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு பணியின் அவசியம் கருதி 01.04.2025 முதல் 30.06.2025 வரை மூன்று மாதத்திற்கு KRS Service நிறுவனத்தின் மூலம் டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு பணியினை மேற்கொள்ளவும், மற்றும் பொதுநிதியிலிருந்து பட்டியல் தொகை வழங்கவும் நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.197/2023/எச்1)

**தீர்மானம் எண்.833 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

## பொருள் எண்.11

குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண். 815 நாள்.27.02.2025ல் 2024-2025ம் ஆண்டிற்கான வரி மற்றும் வரியில்லா இனங்கள் நிலுவை மற்றும் நடப்பு தொகையினை செலுத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு ஆட்டோ மூலம் அறிவிப்பு செய்ய தோராய செலவினம் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலக விலைப்புள்ளி அறிக்கை ந.க.எண்.65/2024/பி1 நாள்.27.02.2025ன்படி 05.03.2025 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | விவரம் | Rate Quoted By சங்கரன் ஆடியோ | Rate Quoted By வேலன் ஆடியோ | Rate Quoted By Sri Vari Enterprises |
|---|---|---|---|---|
| | | தொகை ரூ. (நாள் ஒன்றிற்கு) | தொகை ரூ. (நாள் ஒன்றிற்கு) | தொகை ரூ. (நாள் ஒன்றிற்கு) |
| 1 | குன்றத்தூர் நகராட்சியில் 2024-2025ம் ஆண்டிற்கான வரி மற்றும் வரியில்லா இனங்கள் நிலுவை மற்றும் நடப்பு தொகையினை செலுத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு ஆட்டோ மூலம் அறிவிப்பு செய்தல் | 5000/- | 5500/- | 5700/- |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.சங்கரன் ஆடியோ நிறுவனத்திற்கு அவசர அவசியத்தினை பணி உத்தரவு வழங்கவும், மற்றும் பட்டியல் தொகையினை பொதுநிதியில் வழங்கவும் நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 65/2024/பி1)

## தீர்மானம் எண்.834 நாள்.30.04.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**பொருள் எண்.12**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 600028 அவர்களின் கடிதம் ந.க.எண்.29280/2016/IT நாள்.21.03.20254ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் வரியினங்கள் மற்றும் அனைத்து பணிகளையும் இணையதளம் மூலம் மேற்கொள்ள E-Governance-Urban Tree Information System செயல்படுத்துவது தொடர்பாக BSNL நிறுவனத்தின் மூலம் இணையதள சேவை வழங்கியமைக்கு 01.10.2024 முதல் 31.12.2024 வரையிலான காலத்திற்கு கட்டணம் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குன்றத்தூர் நகராட்சியில் 01.10.2024 முதல் 31.12.2024 வரை UTIS செயல்படுத்தியமைக்கு கட்டணம் ரூ.47251/-ஐ கீழ்க்காணும் விவரப்படி BSNL நிறுவன வங்கி கணக்கில் செலுத்துவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு பெயர் | : | Accounts Officer (Cash), BSNL, TN Circle |
| வங்கி கணக்கு எண் | : | 4386002100014658 |
| வங்கியின் பெயர் | : | Punjab National Bank, Royapettah High Road, Chennai – 600006 |
| IFSC குறியீடு | : | PUNB0438600 |

**அலுவலக குறிப்பு -**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 4466/2023 /பி2)

## தீர்மானம் எண்.835 நாள்.30.04.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**<u>பொருள் எண்.13</u>**

குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண். 815 நாள்.27.02.2025ல் 2025-2026ம் வருடம் முதலாம் அரையாண்டிற்கான சொத்துவரியை 30.04.2025க்குள் செலுத்துபவர்களுக்கு 5% ஊக்கத்தொகை வழங்குவது குறித்து துண்டு பிரசுரம் மற்றும் பேனர்கள் அச்சிடுவதற்கும் மற்றும் சொத்துவரி கேட்பு அறிவிப்பு நோட்டீஸ் பிரிண்ட் எடுத்தல் பணிக்கு தோராய செலவினம் மேற்கொள்ள மன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலக விலைப்புள்ளி அறிக்கை ந.க.எண்.65/2024/பி1 நாள்.04.04.2025ன்படி 11.04.2025ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| Sl No. | Description | Rate Quoted By M/s.Om Shakthi Enterprises | Rate Quoted By M/s.Ameamu Enterprises | Rate Quoted By Thiru.B.Baskaran |
|---|---|---|---|---|
| | | தொகை ரூ. | தொகை ரூ. | தொகை ரூ. |
| 1 | Property Tax Demand Notice | 3.00 | 3.90 | 4.10 |
| 2. | A4 100 GSM ART Paper | 3.50 | 3.80 | 4.00 |
| 3 | Star Flex Print With Angle 6 x 4 | 4500 | 4680 | 4800 |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.Om Shakthi Enterprises நிறுவனத்திற்கு அவசர அவசியத்தினை பணி உத்தரவு வழங்கவும், மற்றும் பட்டியல் தொகையினை பொதுநிதியில் வழங்கவும் நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 65/2024/பி1)

## தீர்மானம் எண்.836 நாள்.30.04.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**பொருள் எண்.14**

குன்றத்தூர் நகராட்சியில் 31.03.2025 உடன் முடிவடையும் 2024-2025ம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள் தயார் செய்யவும் மற்றும் 2023-2024ம் ஆண்டிற்கான தணிக்கை நடைபெற உள்ளதால் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு கணக்குகள் தயார் செய்யவும் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ பொதுநிதியில் மேற்கொள்ளவும் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.822 நாள்.27.02.2025ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து ஆண்டு கணக்குகள் தயார் செய்ய 26.03.2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| Sl No. | Particulars | Rate Quoted By RMS Account Consultant | Rate Quoted by Cursor Solution | Rate Quoted By JB Soft System |
|---|---|---|---|---|
| 1 | Preparation and Data Entry Work for Journal Book, General Ledger, Trial Balance, Balance Sheet & Printout Charges for Year 2023-2024 Annual Account | Rs.1,50,000/- | Rs.1,55,500/- | Rs.1,56,500/- |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள "M/s.RMS Account Consultant" நிறுவனத்திற்கு 27.03.2025 அன்று நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு -**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2056/2024/பி1)

**தீர்மானம் எண்.837 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.15**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4536/2023/அ7 நாள்.16.04.2025-ல் காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கொல்லச்சேரி கிராமம் சேக்கிழார் அரசு மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் எதிர்வரும் 19.04.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் கைவினைத்திட்டத்தை துவக்கி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற உள்ளது. இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டு மேற்படி விழா சிறப்பாக நடைபெறும் பொருட்டு குன்றத்தூர் நகராட்சிக்கு கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

- விழா மேடை மற்றும் விழா நடைபெறவுள்ள இடத்தில் உள்ள புதர்களை அப்புறப்படுத்தி கிருமி நாசினி தெளித்து சுத்தமாக வைத்திருத்தல்
- நகராட்சி முழுவதும் உள்ள தெருக்களில் உள்ள குப்பைகளை அப்புறப்படுத்தி கிருமி நாசினி தெளித்து சுத்தமாக வைத்திருத்தல்
- விழா நடைபெறும் இடம் மற்றும் வாகனங்கள் நிறுத்தும் இடங்கள் ஆகிய பகுதிகளில் அதிகப்படியான தூய்மை பணியாளர்களை அமர்த்தி குப்பைத் தொட்டிகளை அமைத்து குப்பைகள் சேராத வண்ணம் தொடர் கண்காணிப்பில் ஈடுபடுத்துதல். விழா நடைபெறவுள்ள இடத்தில் அதிகப்படியான தூய்மை பணியில் ஈடுபடுத்தி தூய்மைப்பணியினை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்தல்.
- சாலைகளை தூய்மையாக பராமரித்தல், விழா நடைபெறும் இடத்தில் குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை தேவைகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் ஆங்காங்கே நடமாடும் கழிப்பறைகள் அமைத்து பராமரித்தல்.
- விழா நடைபெறும் இடங்கள் அனைத்திலும், எரியாத தெருவிளக்குகள் மற்றும் உடைந்த ஹோல்டர்களை மாற்றி புதிய விளக்குகள் (CFL Bulbs) மற்றும் ஹோல்டர்களை பொருத்தி 100 சதவீதம் மின் விளக்குகள் எரிவதை உறுதி செய்தல்
- விழா நடைபெறும் இடத்திற்கு செல்லும் வழியின் இருபுறங்களிலும் குழல் விளக்குகள் பொருத்துதல்
- விழா நடைபெறும் இடத்திற்கு போதிய அளவிற்கு குடிநீர் தொட்டிகள் (சின்டெக்ஸ்) மற்றும் பொது மக்கள் குடிநீர் குடிக்க ஏதுவாக டம்ளர்கள் வைத்து நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் (Parking Place) போதிய அளவிற்கு குடிநீர் தொட்டிகள் (சின்டெக்ஸ்) மற்றும் பொது மக்கள் குடிநீர் குடிக்க ஏதுவாக டம்ளர்கள் வைத்து நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- தங்கள் பகுதிக்குட்பட்ட சாலைகளில் மாடுகள் சுற்றி திரிவதை கண்காணித்து தடுத்திட வேண்டும்

மேற்காணும் விவரப்படி 19.04.2025 அன்று நடைபெறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் கைவினைத்திட்டத்தை துவக்கி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளை நகராட்சிகள் சட்டப்பிரிவு 57(7)ன்படி அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மற்றும் பட்டியல் தொகை வழங்கவும் நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து மேற்காணும் விழாவிற்கு கீழ்க்காணும் விவரப்படி பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு பணி உத்தரவு வழங்கி பணி முடிக்கப்பட்டமைக்கு பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மற்றும் பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Providing Portable Toilet Rental & Cleaning Services (60 Nos * 2) | M/s.SK Sanitaz | 413000/- |
| 2 | Water Sintex Tank and RCC ring Wall and RO Water Supply | M/s.Akash Electricals and Plumbing | 398840/- |
| 3. | JCB Rent Ground Cleaning, Temporary Approach Road for Parking | M/s.Ramesh Agencies | 401200/- |
| 4. | Ground, Parking Areas Light Arrangements - 2 Days | SPA Electrical and Plumbing Works | 92040/- |
| 5. | Food Supply for Sanitary Workers | Mangadu Sri Balaji Bhavan | 84000/- |
| 6 | Supply of Disinfection & Other Materials | M/s.Sri Sukguru Society Services | 289635/- |

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டப்பிரிவு 57(7)ன்படி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கும் பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1269/2025/இ1)

**தீர்மானம் எண்.838 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.16**

குன்றத்தூர் நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கான நகலெடுக்கும் இயந்திரம் கொள்முதல் செய்து 3 வருடங்களுக்கு மேல் ஆகி பழுதடைந்த நிலையில் உள்ளதால் புதியதாக கொள்முதல் செய்ய குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.796 நாள்.27.02.2025ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலக விலைப்புள்ளி அறிக்கை ந.க.எண்.2056/2024/இ1 நாள்.07.04.2025ன்படி 15.04.2025ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விவரம் | Rate Quoted By M/s.Incom Solutions, | Rate Quoted By M/s.Soorya Trading Co, | Rate Quoted By M/s.SRT Data Solutions |
|---|---|---|---|---|
| | | தொகை ரூ.+ GST 18% Extra) | தொகை ரூ.+ GST Extra) | தொகை ரூ.+ GST Extra) |
| 1 | CANON IR 2925 - Multifunction 230V, Copier (1 No) | 218190 | 221000 | 232500 |
| 2 | CANON DADF - BA1 (1 No) | 42700 | 44800 | 52400 |
| 3 | Pearl Metal Desk (1 No) | 11400 | 12900 | 13200 |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.Incom Solutions நிறுவனத்திற்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 2056/2024/இ1)**

## தீர்மானம் எண்.839 நாள்.30.04.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**பொருள் எண்.17**

குன்றத்தூர் நகராட்சி மீது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் பிற நீதிமன்றங்களில் தொடரப்படும் வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கு நடத்துவதற்கு அரசு வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் செலுத்துவதற்கு 2025-2026ம் ஆண்டிற்கு ரூ.2.00 இலட்சம் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1128/2025/இ1)**

## தீர்மானம் எண்.840 நாள்.30.04.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**<u>பொருள் எண்.18</u>**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-26-ம் ஆண்டு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் (TURIP) கீழ் ரூ.58.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலைப் பணிகள் (1 சிப்பம்) மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.9730/2025/SS1, நாள்.02.04.2025ன்படி நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிப்பட்டதை தொடர்ந்து கீழ்க்காணும் விவரப்படி 5 எண்ணிக்கையிலான தார்சாலை பணிகள் மேற்கொள்ள 28.08.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| வ. எண். | Package | பணியின் விவரம் | Unicode | நீளம் (கி.மீ.) | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | I | காமாட்சி தெரு தேவகி நகர் | 179022R587 | 0.170 | 8.57 |
| 2 | | மகாலிங்கம் தெரு, தேவகி நகர் | 179022R585 | 0.239 | 12.34 |
| 3 | | ராஜேஸ்வரி நகர் மெயின் ரோடு திருவள்ளுவர் தெரு | 179026R647 | 0.175 | 8.61 |
| 4 | | மெட்ரோ கிராண்டு சிட்டி 6வது ரோடு | 179018R314 | 0.180 | 11.51 |
| 5 | | மெட்ரோ கிராண்டு சிட்டி மேற்கு பூங்கா ரோடு | 179018R341 | 0.184 | 16.97 |
| **மொத்தம்** | | | | **0.948** | **58.00** |

**<u>அலுவலக குறிப்பு -</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1180/2025/இ1)**

## தீர்மானம் எண்.841 நாள்.30.04.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**<u>பொருள் எண்.19</u>**

குன்றத்தூர் நகராட்சியில் ஒப்பந்தப் பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் வருமான வரியினை 2024-2025 முதல் காலாண்டு முதல் நான்காம் காலாண்டு வரை இணையதளத்தில் e-filing மற்றும் Return filing செய்தமைக்கு திரு.R.பிரபு என்பவருக்கு தொகை ரூ.55000/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 2056/ 2024/பி1)**

## தீர்மானம் எண்.842 நாள்.30.04.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**பொருள் எண்.20**

குன்றத்தூர் நகராட்சி அலுவலக கணிணிகள் மற்றும் அறிவுசார் மையம் ஆகியவற்றிற்கு இன்டெர்நெட் கட்டணம் செலுத்துவதற்கு 2025-2026ம் ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1128/2025/இ1)**

**தீர்மானம் எண்.843 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.21**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-26-ம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் (KNMT) கீழ் ரூ.360.00 இலட்சம் மதிப்பீட்டில் 5 சிப்பங்களாக தார்சாலைப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 2188/2025/SS1 நாள்.15.03.2025ன்படி நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிப்பட்டதை தொடர்ந்து கீழ்க்காணும் விவரப்படி 5 சிப்பங்கள் தார்சாலை பணிகள் மேற்கொள்ள 28.08.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| வ. எண். | சிப்பம் | பணியின் விவரம் | நீளம் (கி.மீ.) | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | I | அன்னை தெரசா தெரு (179020R429), அன்னை தெரசா 10வது ரோடு (179020R430), அன்னை தெரசா 9வது ரோடு (179020R430), அன்னை தெரசா 8வது ரோடு (179020R432), அன்னை தெரசா 7வது ரோடு (179020R433) ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 1.255 | 86.00 |
| 2 | II | அன்னை தெரசா 5வது ரோடு (179020R435), மணிகண்டன் நகர் 2வது குறுக்கு ரோடு (179020R464), மணிகண்டன் நகர் 1வது குறுக்கு ரோடு (179020R465), சர்.சி.வி ராமன் 1வது தெரு (179020R364), மாணிக்கம் ரோடு (179020R466), நடைபாதை 3வது தெரு (179020R632), மகா நகர் பேஸ் II 29வது குறுக்கு ரோடு (179020R840), மகா நகர் பேஸ் II 28வது குறுக்கு ரோடு ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 1.029 | 69.50 |
| 3 | III | மகா நகர் பேஸ் II 42வது குறுக்கு ரோடு (179030R837), மகா நகர் பேஸ் II 40வது குறுக்கு ரோடு (179030R838), மகா நகர் பேஸ் II மெயின் ரோடு 1வது தெரு (179030R925), மகாலட்சுமி நகர் 5வது ரோடு (179030R816) மற்றும் ஸ்ரீ மேத்தா நகர் கிழக்கு 15வது தெரு (179018R267) ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 0.839 | 82.00 |
| 4 | IV | வெங்கட சுப்பிரமணி நகர், திருநீர்மலை மெயின் ரோடு (179030R847) மற்றும் மகா நகர் பேஸ் II 3வது மெயின் ரோடு (179030R930) ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 0.570 | 67.40 |
| 5 | V | அன்னை தெரசா 6வது ரோடு (179020R434), மகா நகர் பேஸ் II 23வது குறுக்கு ரோடு (179030R858), மகா நகர் பேஸ் II 22வது குறுக்கு ரோடு (179030R859), மகா நகர் பேஸ் II 18வது குறுக்கு ரோடு (179030R861) மற்றும் தயாளன் நகர் (179028R716) ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 0.807 | 55.10 |
| மொத்தம் | | | **4.500** | **360.00** |

**அலுவலக குறிப்பு -** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 1194/ 2025/இ1)**

## தீர்மானம் எண்.844 நாள்.30.04.2025

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.22</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1406/2024/அ3 நாள்.09.10.2024ல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன்படி நகராட்சிகளுக்கு தேவையான பிரிண்டிங் இனங்கள், மல்டி கலர் ஸ்டிக்கர்கள், நோட்டீஸ்கள் மற்றும் அலுவலகத்திற்கு தேவையான பதிவேடுகள், பில் புத்தகங்கள், மூடு தாள்கள், மல்டி கலர் அட்டை பெட்டிகள் மற்றும் கணினி பிரிவு, பேப்பர் பிரிண்டிங் இனங்கள் ஆகியவைகளை திருநெல்வேலி மாவட்ட மல்டி ஃபர்பஸ் தொழில் கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.823 நாள்.27.02.2025ன்படி குன்றத்தூர் நகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி மற்றும் குடிநீர் வரி போன்ற அனைத்து வரியினங்களுக்கான ரசீது புத்தகம் விலைப்புள்ளி கோரி திருநெல்வேலி மாவட்ட மல்டி ஃபர்பஸ் தொழில் கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும் மற்றும் இதற்கான செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து அனைத்து வரியினங்களுக்கான ரசீது புத்தகம் கொள்முதல் செய்ய 11.04.2025 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | விவரம் | Rate Quoted By Tirunelveli District Multi Purpose Service Industrial Co-Operative Society Ltd. | Rate Quoted by Kovilpatti Small Scale Industries Service Industrial Co-Operative Society Ltd. c | Rate Quoted By The Thoothukudi District Hi-Tech Printing and allied Service Industrial Co-Operative Society Ltd |
|---|---|---|---|---|
| | | தொகை ரூ. | தொகை ரூ. | தொகை ரூ. |
| 1 | அனைத்து வரியினங்களுக்கான ரசீது புத்தகம் சப்ளை செய்தல் (1 எண்ணிக்கை) (GST 18% Extra) | 38.00 | 38.50 | 40.00 |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Tirunelveli District Multi Purpose Service Industrial Co-Operative Society Ltd. நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.4241/2024/இ1)**

## தீர்மானம் எண்.845 நாள்.30.04.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**<u>பொருள் எண்.23</u>**

குன்றத்தூர் நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகள் மற்றும் பொதுநிதிப்பணிகள் தொடர்பான ஒப்பந்தப்புள்ளிகள், பொதுசுகாதாரம், வருவாய் பிரிவு மற்றும் இதர அனைத்து பிரிவுகள் தொடர்பான அறிவிப்புகளை நாளிதழ்களில் விளம்பரம் செய்ய விளம்பர நிறுவனங்களுக்கு பட்டியல் தொகையினை 2025-2026ம் ஆண்டுக்கு பொதுநிதியில் வழங்க ரூ.3.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு -</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1128/2025/இ1)**

**தீர்மானம் எண்.846 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.24</u>**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பஜார் தெரு தேரடி முதல் துலுக்கத்தெரு வரை பொதுமக்கள் நலன் கருதி மின்கம்பங்கள் அமைத்து கேபிள், டைமர் மற்றும் தெருமின்விளக்குகள் பொருத்தவும், இதற்கான தோராய செலவினம் ரூ.3.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு -</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1128/2025/இ1)**

**தீர்மானம் எண்.847 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.25**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் ஆ கிராமம், நில அளவை எண்கள்.415/2 & 416-ல் அடங்கிய 7400 ச.மீ. (1.83 ஏக்கர்) பரப்பளவில் 46 மனைகளுக்கான குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு.S.சுதாகர், எண்.39, மேட்டுத்தெரு, குன்றத்தூர், சென்னை – 600069 என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கடித எண்.CMDA/PP/Layout-1/0366/2024 நாள்.24.03..2024ன்படி அங்கீகரிக்கப்பட்டு மேற்படி நில அளவை எண்ணில் 46 எண்ணிக்கை மனைகளாக மனைப்பிரிவு செய்து திட்ட அனுமதி எண்.PPD/LO.No.OL-01664 நாள்.24.03.2025ன்படி இறுதி ஒப்புதலுக்கு வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1083/2025/எப்1)

## தீர்மானம் எண்.848 நாள்.30.04.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**பொருள் எண்.26**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 30 வார்டுகளில் எதிர்வரும் கோடை காலத்தை முன்னிட்டு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் வறட்சியான பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கவும், மற்றும் இப்பணியினை 2025-2026ம் ஆண்டு பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு -**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1128/2025/இ1)

## தீர்மானம் எண்.849 நாள்.30.04.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**<u>பொருள் எண்.27</u>**

குன்றத்தூர் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவின் கீழ் 1 முதல் 30 வார்டுகளில் உள்ள பகுதிகளில் டெங்கு காய்ச்சல் மற்றும் வைரஸ் காய்ச்சல் உருவாக காரணமாக உள்ள கொசுப்புழுக்கள் மற்றும் முதிர் கொசுக்களை ஒழிக்க தேவையான (Temephos, Bacillus thuringiensis, Pyrethrum 2% Extract, Nuvan, Malathion and etc.,) கொசுஒழிப்பு மருந்துகளை அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்யவும், அதற்குண்டான தோராய செலவினம் ரூ.4,50,000/-ஐ பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு -</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1128/2025/எச்1)

**தீர்மானம் எண்.850 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.28**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான குடிநீர் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு .

| வ. எண். | இடத்தின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.27-ல் கீழாண்டை தெருவில் புதியதாக போர்வெல் அமைத்து அதில் மின் மோட்டார், பைப், கேபிள், EB கேபிள் பாக்ஸ் அமைத்து புதியதாக பைப்லைன் அமைத்து இணைப்பு வழங்குதல். | 8.00 |
| 2 | மேத்தா நகரில் உறை கிணறு மற்றும் மின்மோட்டார் அமைத்தல். | 14.50 |
| 3 | நத்தம் ஒத்தவாடை பகுதியில் புதியதாக போர்வெல் அமைத்து அதில் மின் மோட்டார், பைப், கேபிள், EB கேபிள் பாக்ஸ் அமைத்து புதியதாக பைப்லைன் அமைத்து இணைப்பு வழங்குதல். | 9.00 |
| 4 | மோகலிங்கம் நகர் மற்றும் பெரியார் நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் நடைப்பெறும் போது பைப்லைன் அகற்றப்பட்டதால் அதற்கு பதிலாக புதியதாக பைப்லைன் அமைத்தல். | 2.00 |
| 5 | நத்தம் முருகன் கோயில் பின்புற பகுதியில் புதியதாக போர்வெல் அமைத்து அதில் மின் மோட்டார், பைப், கேபிள், EB கேபிள் பாக்ஸ் அமைத்து புதியதாக பைப்லைன் அமைத்து அதிலிருந்து பைப்லைன் புதியதாக பொருத்தி ஏற்கனவே உள்ள பைப்லைனில் இணைப்பு வழங்குதல். | 8.00 |
| 6 | மேத்தா நகர் மற்றும் கரைமாநகர் ஆகிய பகுதிகளில் உறை கிணறு மற்றும் மின்மோட்டார் அமைத்தல். | 9.50 |
| 7 | மணிகண்டன் நகர் பகுதியில் உள்ள பழைய போர்வெல்லில் சுத்தம் செய்து புதியதாக மின்மோட்டார் கேபிள், EB கேபிள் மோட்டார் பைப் மற்றும் பைப்லைன் அமைத்து ஒட்டர் குடிசைக்கு இணைப்பு வழங்குதல். | 3.00 |
| 8 | குன்றத்தூர் நகராட்சி வார்டு எண்.1 முதல் 10 வரை குடிநீர் விநியோக பழுதுநீக்கம், பிரதான மற்றும் பகிர்மான குழாய் – 2024-25ம் ஆண்டு பராமரிப்பு பணி நீட்டிப்பு செய்தல் (ஏப்ரல் -2025 முதல் ஜுன்-2025 வரை ) | 7.00 |
| 9 | குன்றத்தூர் நகராட்சி வார்டு எண்.11 முதல் 20 வரை குடிநீர் விநியோக பழுதுநீக்கம், பிரதான மற்றும் பகிர்மான குழாய் – 2024-25ம் ஆண்டு பராமரிப்பு பணி நீட்டிப்பு செய்தல் (ஏப்ரல் -2025 முதல் ஜுன்-2025 வரை ) | 7.00 |
| 10 | குன்றத்தூர் நகராட்சி வார்டு எண்.21 முதல் 30 வரை குடிநீர் விநியோக பழுதுநீக்கம், பிரதான மற்றும் பகிர்மான குழாய் – 2024-25ம் ஆண்டு பராமரிப்பு பணி நீட்டிப்பு செய்தல் (ஏப்ரல் -2025 முதல் ஜுன்-2025 வரை ) | 9.00 |

**அலுவலக குறிப்பு -** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1128/2025/இ1)**

**தீர்மானம் எண்.851 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.29**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் அ கிராமம், நில அளவை எண்கள்.713/1A, 713/1B, 713/2 & 714-ல் அடங்கிய 11150 ச.மீ. (2.76 ஏக்கர்) பரப்பளவில் 73 மனைகளுக்கான (Regular Plots - 1 to 59 = 59 Plots & EWS Plots - 60 to 73 = 14 Plots ) குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க M/s.RDB Real Estate Constructions Limited represented by its Authorised Signatory திரு.L.சரவணன் என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கடித எண்.CMDA/PP/Layout-1/0272/2024 நாள்.21.03.2025ன்படி அங்கீகரிக்கப்பட்டு மேற்படி நில அளவை எண்ணில் 73 எண்ணிக்கை மனைகளாக மனைப்பிரிவு செய்து திட்ட அனுமதி எண்.PPD/LO.No.OL-01658 நாள்.21.03.2025ன்படி இறுதி ஒப்புதலுக்கு வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.1003/2025/எப்1)**

## தீர்மானம் எண்.852 நாள்.30.04.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**பொருள் எண்.30**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-26-ம் ஆண்டு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் (TURIP) கீழ் ரூ.58.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலைப் பணிகள் மேற்கொள்ள 28.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்த பதிவேட்டினை பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | காமாட்சி தெரு தேவகி நகர், மகாலிங்கம் தெரு, தேவகி நகர், ராஜேஸ்வரி நகர் மெயின் ரோடு திருவள்ளுவர் தெரு, மெட்ரோ கிராண்டு சிட்டி 6வது ரோடு மற்றும் மெட்ரோ கிராண்டு சிட்டி மேற்கு பூங்கா ரோடு தார்சாலை அமைத்தல் | 58.00 | C.N.இராமச்சந்திரன் | குறைவு |
| | | | M.கார்த்திக் | அதிகம் |

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1180/2025/இ1)**

## தீர்மானம் எண்.853 நாள்.30.04.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

## பொருள் எண்.31

குன்றத்தூர் நகராட்சியில் 2025-26-ம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் (KNMT) கீழ் ரூ.360.00 இலட்சம் மதிப்பீட்டில் 5 சிப்பங்களாக தார்சாலைப் பணிகள் மேற்கொள்ள 28.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்த பதிவேட்டினை பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | சிப்பம் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|---|
| 1 | I | அன்னை தெரசா தெரு (179020R429), அன்னை தெரசா 10வது ரோடு (179020R430), அன்னை தெரசா 9வது ரோடு (179020R430), அன்னை தெரசா 8வது ரோடு (179020R432), அன்னை தெரசா 7வது ரோடு (179020R433) ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 86.00 | C.N.இராமச்சந்திரன் | குறைவு |
| | | | | M.கார்த்திக் | அதிகம் |
| 2 | II | அன்னை தெரசா 5வது ரோடு (179020R435), மணிகண்டன் நகர் 2வது குறுக்கு ரோடு (179020R464), மணிகண்டன் நகர் 1வது குறுக்கு ரோடு (179020R465), சர்.சி.வி ராமன் 1வது தெரு (179020R364), மாணிக்கம் ரோடு (179020R466), நடைபாதை 3வது தெரு (179020R632), மகா நகர் பேஸ் II 29வது குறுக்கு ரோடு (179020R840), மகா நகர் பேஸ் II 28வது குறுக்கு ரோடு ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 69.50 | E.சேகர் | குறைவு |
| | | | | M.கார்த்திக் | அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | III | மகா நகர் பேஸ் II 42வது குறுக்கு ரோடு (179030R837), மகா நகர் பேஸ் II 40வது குறுக்கு ரோடு (179030R838), மகா நகர் பேஸ் II மெயின் ரோடு 1வது தெரு (179030R925), மகாலட்சுமி நகர் 5வது ரோடு (179030R816) மற்றும் ஸ்ரீ மேத்தா நகர் கிழக்கு 15வது தெரு (179018R267) ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 82.00 | C.N.இராமச்சந்திரன் | குறைவு |
| | | | | M.கார்த்திக் | அதிகம் |
| 4 | IV | வெங்கட சுப்பிரமணி நகர், திருநீர்மலை மெயின் ரோடு (179030R847) மற்றும் மகா நகர் பேஸ் II 3வது மெயின் ரோடு (179030R930) ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 67.40 | E.சேகர் | குறைவு |
| | | | | M.கார்த்திக் | அதிகம் |
| 5 | V | அன்னை தெரசா 6வது ரோடு (179020R434), மகா நகர் பேஸ் II 23வது குறுக்கு ரோடு (179030R858), மகா நகர் பேஸ் II 22வது குறுக்கு ரோடு (179030R859), மகா நகர் பேஸ் II 18வது குறுக்கு ரோடு (179030R861) மற்றும் தயாளன் நகர் (179028R716) ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 55.10 | D.குமரவேல் | குறைவு |
| | | | | E.சேகர் | அதிகம் |
| **மொத்தம்** | | | **360.00** | | |

<u>அலுவலக குறிப்பு -</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண். 1194 /2025/இ1)**

**தீர்மானம் எண்.854 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.32**

குன்றத்தூர் நகராட்சியில் மக்கள் அதிகளவில் பயன்படுத்தும் வர்த்தகப் பகுதியாக இருந்த தேரடி அருகில். பெரிய தெரு, பஜார் தெரு, துலுக்கத்தெரு மற்றும் இணைப்பு தெருக்கள் போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதியாக உள்ளது. எனவே மேற்படி No-Vending Zone என்பதால் குன்றத்தூர் துலுக்கத் தெரு குளம் எதிரில் உள்ள காலியிடம் மற்றும் காவல் நிலையம் பின்புறம் உள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடம் மற்றும் உழவர் சந்தை அருகிலுள்ள காலியிடத்தில் Vending Zone-க்கு மாற்று இடம் கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி இடம் Vending Zone பகுதியாக மாற்றம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

**அலுவலக குறிப்பு -**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2332/2023 /எப்1)

**தீர்மானம் எண்.855 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.33**

குன்றத்தூர் நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கான நகலெடுக்கும் இயந்திரம் கொள்முதல் செய்து 3 வருடங்களுக்கு மேல் ஆகி பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அலுவலக பணிகள் பாதிக்கப்படுகிறது. எனவே மேற்படி இயந்திரம் பழுதுநீக்கம் செய்ய குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.821 நாள்.27.02.2025ன்படி ஒப்புதல் பெறப்பட்டதை தொடர்ந்து, 24.03.2025 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விவரம் | Rate Quoted By M/s.Incom Solutions, | Rate Quoted By M/s.Soorya Trading Co, | Rate Quoted By M/s.Microtechss Equipments Pvt Limited |
|---|---|---|---|---|
| | | தொகை ரூ.+ GST 18% Extra) | தொகை ரூ.+ GST Extra) | தொகை ரூ.+ GST Extra) |
| 1 | Canon Drum Unit NPG-50/51 GPR-34/35 CEXV32/33, Dimension - 54.4 x 20.4 x 15.8 cm SKU-OFF INK.26972111 Drum Unit of the finest quality and rest assured to get the best in terms of both durability and performance | 21250 (1No) | 22900 (1No) | 23900 (1No) |
| 2 | ADF Roller kit, Transfer Belt Cleaning Blade | 29300 (1No) | 30400 (1No) | 31500 (1No) |
| 3 | Pickup Roller | 37400 (1No) | 38800 (1No) | 39600 (1No) |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த அளித்த M/s.Incom Solutions நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு -** மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2056/2024 /இ1)

**தீர்மானம் எண்.856 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.34**

தமிழக அரசின் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தும் சிறப்பு திட்டத்தின் கீழ் அரசு புறம்போக்கில் ஏற்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்புகளில் குன்றத்தூர் வட்டம் நெ.09 மூன்றாம்கட்டளை கிராமம் பகுதியில் நிலமதிப்பின்றி வீட்டு மனைப்பட்டா பெற பரிந்துரைக்கப்பட்ட கீழ்க்காணும் விவரப்படியான தகுதியுடைய பயனாளிகளின் விவரப்பட்டியலுடன் வரப்பெற்ற வட்டாட்சியர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | புல எண். | ஆக்கிரமிப்பாளர் பெயர்<br>ஆக்கிரமிப்பாளர் த/பெ (அ) க/பெ | வகுப்பு |
|---|---|---|---|
| 1 | 98 | கலா க/பெ மாசிலாமணி | அ.வ |
| 2 | 98 | வேளாங்கன்னி க/பெ ராஜா | அ.வ |
| 3 | 98 | காஞ்சனா க/பெ படவேட்டன் | அ.வ |
| 4 | 98 | பட்டம்மாள் க/பெ முருகன் | அ.வ |
| 5 | 98 | ஜெயந்தி க/பெ சந்திரன் | அ.வ |

**அலுவலக குறிப்பு -**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1552 /2025/எப்1)

**தீர்மானம் எண்.857 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.35**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18, மெட்ரோ கிராண்ட் சிட்டி பகுதியில் 2022-2023ம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பொருத்தப்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் பொதுமக்கள் சிரமப்படுவதாக தெரிவித்து மேற்படி பழுதடைந்த கண்காணிப்பு கேமராக்களை பழுதுநீக்கம் செய்யக்கோரி வரப்பெற்ற மெட்ரோ கிராண்ட் சிட்டி குடியிருப்பாளர்கள் நலச்சங்க மனுவின் அடிப்படையில் அவசர அவசியம் கருதி ரூ.3.80 இலட்சம் மதிப்பீட்டிற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.800 நாள்.27.02.2025ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலக விலைப்புள்ளி அறிக்கை ந.க.எண்.2056/2024/இ1 நாள்.13.03.2025ன்படி 21.03.2025ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | விவரம் | Rate Quoted By M/s.Home Tome | Rate Quoted By M/s.Rupdep Projects Consultants Pvt Ltd, | Rate Quoted By Thiru.A.Prabu |
|---|---|---|---|---|
| | | தொகை ரூ. | தொகை ரூ. | தொகை ரூ. |
| 1 | Renovate and Repair Existing CCTV Monitoring System : Supply and install missing/not working spares like DVR 4 channel, DVR power adopter, power supply port, 1 TB Hard Disk, DVR Battery Electrical power source and change all DC pin and BNC pin for all camera and Reset or configure existing system to start Recording in all 27 nos CCTV System | 348690/- (With GST 18%) | 351168/- (With GST 18%) | 375240/- (With GST 18%) |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த அளித்த M/s.Home Tome நிறுவனத்திற்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 28.03.2025 அன்று பணி உத்தரவு வழங்கியமைக்கும், மற்றும் பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு -**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2056/2024 /இ1)

**தீர்மானம் எண்.858 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.36**

குன்றத்தூர் நகராட்சியின் ஆணையர் பயன்பாட்டிற்கான பொலீரோ வாகனம் TN 85 R 9451 மற்றும் நகராட்சி பொறியாளர் பயன்பாட்டிற்கான பொலீரோ வாகனம் TN 85 U 4504 ஆகிய வாகனங்களில் உள்ள சீட் கவர் மற்றும் தரை விரிப்பான் மற்றும் மின்சாதன பொருட்கள் ஆகியவை பழுதடைந்துள்ளதால் மேற்படி பொருட்கள் கொள்முதல் செய்ய தோராய செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண். 708 நாள்.27.09.2024ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலக விலைப்புள்ளி அறிக்கை ந.க.எண்.2056/2024/இ1ன்படி 14.04.2025ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | விவரம் | Rate Quoted By KRS Service | Rate Quoted by Kovilpatti R.Harish Kumar | Rate Quoted By Sri Vari Enterprises |
|---|---|---|---|---|
| | | தொகை ரூ. | தொகை ரூ. | தொகை ரூ. |
| 1 | Leather Set Cover | 7600 | 7800 | 8100 |
| 2 | Sun Films | 4000 | 4100 | 4500 |
| 3 | Horn | 4400 | 4500 | 4800 |
| 4 | Fog Lights | 4200 | 4300 | 4700 |
| 5 | Floot Mat | 4300 | 4400 | 4900 |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த அளித்த M/s.KRS Service நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும், மற்றும் பொதுநிதியில் பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு -**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2056/2024 /இ1)

**தீர்மானம் எண்.859 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.37</u>**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பஜார் தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்து வார்டு எண்.4, 8, 9, 15, 21, 22, 23, 24 ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் திட்டத்தின் பஜார் தெருவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை இடித்து புதியதாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணி நடைபெற இருப்பதால் மேற்படி பகுதிகளுக்கு ஒண்டிக்காலனி குடிநீர் விநியோக தொட்டியில் இருந்து மின் மோட்டார் மூலம் நேரடியாக குடிநீர் விநியோகம் செய்ததை ஆய்வு செய்யப்பட்டதில் வார்டு எண்.8 பெரிய தெரு, வார்டு எண்.9 சின்னத்தெரு மற்றும் வார்டு எண்.15 துலுக்கத்தெரு ஆகிய பகுதிகளுக்கு போதுமான அழுத்தம் இல்லாததால் குடிநீர் விநியோகம் சீராக செய்ய இயலவில்லை.

எனவே மேற்படி பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய ஒண்டிக்காலனி நீர்த்தேக்க தொட்டியில் புதியதாக மின்மோட்டார், மற்றும் ஒண்டிக்காலனி, அம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் இரண்டு வால்வுகள் பொருத்துவதற்கு அவசர அவசியம் கருதி ரூ.2.00 இலட்சத்திற்கு விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண். 763 நாள்.10.01.2025ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து 2024-2025ம் பொதுநிதியின் கீழ் 15.04.2025 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | விவரம் | Rate Quoted By SVB Electricals | Rate Quoted by Akash Electricals and Plumbing Works | Rate Quoted By Sri Lakshmi Turning Works |
|---|---|---|---|---|
| | | தொகை ரூ. | தொகை ரூ. | தொகை ரூ. |
| 1 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8 பெரிய தெரு, வார்டு எண்.9 சின்னத்தெரு மற்றும் வார்டு எண்.15 துலுக்கத்தெரு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய ஒண்டிக்காலனி நீர்த்தேக்க தொட்டியில் புதியதாக மின்மோட்டார் அமைத்தல் மற்றும் ஒண்டிக்காலனி, அம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் இரண்டு வால்வுகள் பொருத்துதல் | Rs.110041/- (குறைவு) | Rs.110992/- (அதிகம்) | Rs.112096/- (அதிகம்) |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் M/s. SVB Electricals நிறுவனத்தின் விலைப்புள்ளிகளின் விலைவிகிதம் குறைவாக உள்ளதால் மேற்காணும் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழுங்கவும், இச்செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு -</u> மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2056/2024 /இ1)

**தீர்மானம் எண்.860 நாள்.30.04.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.38**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2056ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான அடிப்படை பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 15 வரையிலான பகுதிகளில் உள்ள மழைநீர் கால்வாய் தூர்வாரி சுத்தம் செய்தல் | 19.80 |
| 2. | வார்டு எண்.16 முதல் 30 வரையிலான பகுதிகளில் உள்ள மழைநீர் கால்வாய் தூர்வாரி சுத்தம் செய்தல் | 19.80 |
| 3. | நடைபாதை தெருவில் உள்ள திடக்கழிவு மேலாண்மை திட்ட குப்பை கிடங்கில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 20.00 |
| 4. | குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 30 வார்டுகளில் வேகத்தடை அமைத்தல் | 19.00 |
| 5 | மாணிக்கம் நகர் குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 19.40 |
| 6 | சார்பதிவு அலுவலகம் முதல் சுமதி அப்பார்ட்மெண்ட் வரை மழைநீர் கால்வாய் அமைத்தல். | 19.80 |
| 7 | ராஜேஸ்வரி நகர் நேதாஜி தெரு மழைநீர் கால்வாய் அமைத்தல். | 19.80 |
| 8 | மூன்றாங்கட்டளை தேவி கருமாரியம்மன் நகர் மழைநீர் வடிகால் மற்றும் அணுகு சாலை அமைத்தல் | 19.60 |
| 9 | குன்றத்தூர் கார்டன் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 19.70 |
| 10 | எழுதுபொருட்கள் சப்ளை செய்தல் மற்றும் பேனர் அச்சிடுதல் (01.07.2025 முதல் 31.03.2026 வரை) | 7.00 |
| 11 | அலுவலக பிரிண்டருக்கு டோனர் சப்ளை செய்தல் மற்றும் ரீபில்லிங் செய்தல் (01.07.2025 முதல் 31.03.2026 வரை) | 7.00 |
| 12 | அலுவலக பயன்பாட்டிற்கு நோட்டீஸ் அச்சிடுதல் மற்றும் பதிவேடுகள் பைண்டிங் செய்தல் (01.07.2025 முதல் 31.03.2026 வரை) | 7.00 |
| 13 | குன்றத்தூர் நகராட்சியின் அலுவலக மற்றும் அறிவுசார் மையத்தில் உள்ள கணிணி, பிரிண்டர் மற்றும் அலுவலக நகலெடுக்கும் இயந்திரம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் (01.07.2025 முதல் 31.03.2026 வரை) | 2.50 |
| 14 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கரைமாநகர் பகுதியில் சாலை விரிவாக்கம் தொடர்பாக நெடுஞ்சாலை துறை மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட உள்ளதை தொடர்ந்து இடிபாடுகளை அகற்ற JCB இயந்திரம் பயன்படுத்துதல் மற்றும் லாரி மூலம் அப்புறப்படுத்துதல் | 4.00 |
| 15 | நடைபாதை தெரு எரிவாயு தகன மேடையினை இயக்குவது தொடர்பாக சுற்றுச்சூழல் ஆலோசனை பெறுவதற்கான Consultancy Fees மற்றும் தடையில்லா சான்று பெறுவதற்கு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு தொகை செலுத்துதல். | 1.70 |
| 16 | குன்றத்தூர் நகராட்சி அலுவலக கூடுதல் கட்டிடத்தில் உள்ள கணிணிகள் மற்றும் பிரிண்டர்களுக்கு Internet Connection மற்றும் UPS Line அமைத்தல் பணி | 4.00 |

**அலுவலக குறிப்பு -** மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.1128/2025/இ1)**

## தீர்மானம் எண்.861 நாள்.30.04.2025

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**